உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆ அக்டோபர் மீ [இதழ் ௧0.

இலௌகிகப் பகுதி.

விஷயக் கோத்து.

சீனாவும் குடியரசும்.

இப்பொழுது சீனா குடியரசு நாடென்பதும் தற்காலம் யூன்ஷி என்பவர் அதில் அத்தியக்ஷராய் (பிரஸிடென்ட்) இருக்கிறாரென் ரம் பலர் அறிந்த விஷயம். இப்பொழுது அவர் நியமனம் பெற்று ன்கு வருஷங்களாகின்றன. ஜனங்களில் பலர் தங்களுக்குக் குடியரசு பிடிக்கவில்லையென்றும் இராஜரிகமே தங்களுக்கு வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்துகொண்டிருப்பதால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜனங்களால் சீட்டுப்போட்டுத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஒரு கூட்டத்தில் இந்த விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டுமென்று இராஜ்ய ஆலோசனைச் சங்கத்தில் செய்த தீர்மானமானது பிரஸிடென்ட் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் இப் பிரதிநிதி நியமனம் தேசமெங்கும் நடைபெறும். சீனாதேசம் இனி இராஜரிக நாடாக விளங்குவதா அல்லது குடியரசு நாடாக விளங்குவதா என்பது தீர்மானிக்கப்படும். ஜனங்களிடம் கல்வியும் நாகரிகமும் தேசபக்தியும் நிறைந்து சுய

நலம் பாராட்டாமல் பொதுஜன க்ஷேமத்தையே கோரி யுழைக்குங் குண மேற்பட்ட தேசத்திற்கன்றோ குடியரசு தகும்! அக்குணமில்லாவிடில் குடியரசினும் கொடுங்கோன்மையே மேலென நினைக்க நேரிடுமே!

*
* *

விக்டோரியா மகாராணியும், அவர் முதல் தௌகித்திரனுகிய கைஸரும்.

ஏழெட்டு வருஷங்களுக்கு முந்தி லார்ட் எஷர் என்பவரால் பிர சுரிக்கப்பட்ட விக்டோரியா இராணி யவர்களின் கடிதங்களில் பின்வரும் சில அற்புத விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. தமது மூத்த குமாரி புருஷியா தேசத்து ப்ரெடரிக் உவில்லியம் என்னும் இளவாசனை (பிறகு இவர் ப்ரெடரிக் சக்கரவர்த்தி யானுர்) மணந்த காலத்தில் இராணியம் மாள் நிரம்ப இறுமாப்புற்றூர். அம் மகள் வயிற்றில் தற்காலம் ஜர்மனி சக் கரவர்த்தியாய் விளங்கும் உவில்லியம் 1859 ஆ ஜனவரி மாதத்திற் பிறந்த காலத்தில், அவருக்கு உண்டான உவகைக்கு ஓர் அளவு இல்லை. "செல்வக் குழந்தை நன்றாய் வளர்ந்துவருகின்றது, இந்த விஷயத்தில் புருஷியாவில் எவ்வளவு இசையும் சந்தோஷமும் இருக்கின்றனவோ அவ்வளவு இங்கும் இருக்கின்றன" என்று எழுதியிருக்கிறூர். மேலும், அக் குழந்தை ஞானஸ்நானம் பெற்ற காலத்தில் "இங்கிலாந்தையும் ஜர் மனியையும் ஒன்று படுத்திச் சந்தோஷிப்பிக்கும் இச் சடங்கிற்கு நான் போகக்கூடாததற்குத் துக்கிக்கிறேன்" என்றும் சொல்லியிருக்கின்றூர்.

இது எழுதி இப்பொழுது 56 வருஷங்கள் ஆகின்றன. இச் செல்வக் குழந்தையின் லீலைகளால் உலகிற்கே இப்பொழுது உண்டா யிருக்கும் பீடைகளைக் கணக்கிட முடியாது. இது குலத்தைக் கெடுக்க வந்த கோடரி என்பது நமது மகாராணி யவர்களுக்கு அப்பொழுதே எப்படித் தெரியக்கூடும்?

*
* *

குடிக்கும் வழக்கம்.

சென்னை கவர்ன்மெண்டார் ஜனங்களுக்குள் பரவி வரும் குடிக் கும் வழக்கத்தைக் குறைப்பதற்காக, கள்ளுக்கடை சாராயக்கடைகளின் பக்கத்தில் தேக்கடைகளும் காப்பிக்கடைகளும் வைக்க உத்தரவு கொடுக் கக்கூடுமென்று தெரிவித்திருக்கிறூர்கள். அதனுல் ஜனங்கள் கள் முத லிய லாகிரி வஸ்துக்களை விட்டு டீ முதலிய பானங்களைச் செய்தால் குடிக்கும் வழக்கம் மாறுமென நினைக்கிறூர்கள்போலும். இது பலிக் குமா என்பது சந்தேகம்.

219

தொழுக்கட்டை.

சென்னை கவர்ன்மெண்டார் குற்றவாளிகளைத் தொழுவில் அடைத்துவைக்கும் வழக்கத்தை நிறுத்தச் சீக்கிரத்தில் ஓர் சட்டம் செய்யப்போகிறார்கள். சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் முதலிய பெற்றுள்ள இப் பிராஞ்சிந்தியாவிலும் மனிதர்களை மிருகம்போல் நடத்தும் இவ் வழக்கம் இருக்கின்றதே! இதை நிறுத்தும் காலம் எப்பொழுது வரும்? இதைப்பற்றி நமது ஜனரல் கூட்டத்தில் பேசுவாருமுளரோ?

* * *

இருப்புப்பாதை.

ரெயில்வே கம்பெனியார் சம்பாத்தியத்தில் பெரும்பாகம் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளிடமிருந்து வருகின்றது. சௌகரியங்களோ அவர்களுக்குத்தான் குறைவு! காரணம்? இந்தியர்கள் ரெயில் பிரயாணத்தை ஐரோப்பியர்களைப்போல் வேடிக்கைக்காவது பொருளீட்டற்காவது செய்வதில்லை. தீராப் பொறியாயிருந்தாலொழிய நம்மவர்கள் புகைவண்டி ஏறுவதில்லை. அப்படிப் போனாலும் அதை ஒரு விரதம்போல் நினைத்துப் பல்லைக் கடித்துக்கொண்டு ரெயில்வே கீழுத்தியோகஸ்தர்களால் உண்டாகும் கஷ்டங்களை மனப்பூர்வகமாய் அநுபவித்துக்கொண்டு வருகிறார்கள். தாங்கள் கொடுத்த பணத்திற்குத் தக்கபடி சௌகரியத்தைத் தேடும் வழக்கம் இவர்களிடத்து இல்லை. இவர்களுக்கு மாடடைக்கும் வண்டியிலாவது சரக்கேற்றும் வண்டியிலாவது இடம் கிடைத்தாற் போதாதா என்று கம்பெனி உத்தியோகஸ்தர்களிற் சிலர் நினைக்கிறார்கள். இவர்கள் சௌக்கியத்தைத் தேடவேண்டியது கம்பெனியார்க்குப் பெருங் கடமையன்றோ?

மணிதாசன்.

ஜீவகாருண்யம்.

சகோதர சகோதரிகளே!

"ஜீவகாருண்யம்" என்பது ஜீவன், காருண்யம் என்னும் இரண்டு பதங்கள் சேர்ந்த ஓர் தொடர். ஜீவனென்பது ஈசுவரனுடைய அம்சமாயுள்ளதும், உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளிடத்தும் நின்று விளங்குவதுமாகிய ஆன்மாவேயாம். காருண்யமென்பது கிருபை, தயை,

அருள் எனப்படும். ஆகவே ஜீவகாருண்யமென்பது உலகத்திலுள்ள சகலப் பிராணிகளிடத்தும் அருளோடு கூடியிருத்தலாம்.

யானையின் அடிக்குப் பெரிதாகிய அடி உலகத்திலுண்டா? மற்றெல்லாப் பிராணிகளின் அடிகளும் அதற்குள் ளடங்குமல்லவா? அதுபோல, ஜீவகாருண்யமென்னும் விரதம் ஒருவரிட மிருக்குமாயின் அவர் வேறு தவம், விரதம் முதலியவைகளை யநுட்டிக்கவேண்டுவதில்லை. ஆனதுபற்றியே மேலோர்,

“எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.”

“தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவூலென்று செய்வேன் பராபரமே.”

எனக் கூறியிருக்கிறார்.

இவ் வுலகத்தில் ஒருவர் அடையக்கூடிய இன்பத்துக்குப் பொருளானது எப்படிக் காரணமாக விருக்கிறதோ அப்படியே தருமத்தையும், மறுமையின்பத்தையு மடைவதற்கு ஜீவகாருண்யமே காரணமாகும். இவ்வித அருளானது எவரிடத்திருந்தாலும், அவர்கள் இம்மை மறுமைகளில் சுகத்தை யடைவார்கள். இக்கருத்துப்பற்றியே நாயனார், “அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த வின்னா வுலகம் புகல்.” “அல்லலருளாள்வார்க் கில்லை வளிவழங்கு மல்லன்மா ஞாலங் கரி.” “அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு.” என்று கூறியுள்ளார்.

“தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனு மின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துய்ந்து போகுமே.”

“உயிர்க ளோம்புமி னூன்விழைந் துண்ணன்மின்
செயிர்கணீங்குமின் செற்ற மிகந்தொரீஇக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.”

என்ற பெரியோர் வாக்கியங்களும் ஈண்டுக் கவனிக்கத்தக்கவை.

அன்பர்களே! இத் தருமம் ஒன்றுமட்டும் இல்லாமல் மற்றைய எவ்வித மேம்பாடுகளையுடைய தவங்களையும், விரதங்களையும் உடையராயினும், அது அவர்களுக்கு ஒரு பிரயோஜனத்தையும் பயக்காது.

இவ்வித அருளை அல்லது இரக்கத்தை உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளிடத்தும் பாராட்டவேண்டும்.

எதாவது ஒரு பிராணி துன்பத்தை யடையுமாயின், தன் மேல் படவரும் அடியைக் கையானது தானாகவே போய்த் தடுப்பதுபோலவும், சந்திரன் தான் களங்கத்தை யடைந்து வருத்தமுறும்பொழுதும், உலகத்தாருக்குப் பிரகாசத்தைக் கொடுத்து உதவுதல்போலவும், அறிவுடையவர்கள் தாம் துன்பமுற்றிருக்கும் நிலைமையிலும், அதைக் கவனியாது விரைந்து சென்று உதவுவார்கள்.

ஜீவகாருண்ய முள்ளவர்கள் எல்லா வுயிர்களையும் தம்முயிரைப் போலப் பார்ப்பவர்களாதலால், அவைகள் துன்பமுறும்பொழுது பார்க்கச் சகியார்கள். ஆனதுபற்றியே,

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகி
னிறையிருளை நீக்குமே யின்று." எனவும்,

"போறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் — நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது." எனவும் கூறப்பட்டிருக்கிறது.

மனித வகுப்பினரில் சிலரைத் தவிர்த்து, மற்றைத் தாழ்ந்த ஜாதியாரையும், மிருகங்களையும் இம்சை செய்து கடுமையாக நடத்தினாலும் பாதகமில்லை யெனச் சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. நம்மிடம் வேலைக்காரர்களாகவும், வேலைசெய்யும் மாடுகளாகவும் அமைந்திருப்பதெல்லாம், அவர்கள் ஜென்மாந்தரத்தில் செய்த கருமத்தினாலெனவும், நாம் அவர்களைச் சரியாக அன்புடன் நடத்திப் பாதுகாக்கும் பொருட்டுக் கடவுள் நம்மிடம் ஒப்புவித்திருக்கிறாரெனவும் சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

காருண்யவான்களே!

இப்படிப்பட்ட மனிதர்களையும், மிருகங்களையும் அன்புடன் நடத்தாமல் அடித்துத் தொந்தரவு செய்தால், நாம் கடவுளுக்கு நாளை என்ன உத்தரவு சொல்வோம்? இவ்விதம் அருளைக் கெடுப்பதில் முக்கியமான விரோதிகள், கொடுமை கொலை இரண்டுமேயாம்.

222

புலாலுண்ணலைக் குறித்தே பிராணிகள் கொலைசெய்யப்படுகின்றன. புலாலுண்பவர்கள் வியாதியினுலாவது மற்றெந்தக் காரணத்தினுலாவது உயிர் நீங்கிய சவத்தைப் புசிப்பதில்லை. மிருகங்களையும், பறவைகளையும் அவைகளுயிருடனும் தேக சௌக்கியத்துடனு மிருக்கும் பொழுதே, அவைகளைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றும், கத்தியால் கழுத்தையறுத்து உயிரைப் போக்கியும் புசித்தற்கே பிரியப்படுகிறுர்கள்.

தங்களுடைய வீட்டில் பிள்ளைகளைப்போல வளர்க்கும் கோழிகளையும், ஆட்டுக்குட்டிகளையும் நெஞ்சில் கொஞ்சமும் இரக்கமின்றிக் கழுத்தை யறுக்கிறுர்களே, இவர்கள் குழந்தைகளை அப்படிச் செய்யத் துணிவார்களா? மிருகங்களையும், பறவைகளையும் கொலைசெய்யும் பொழுது, அவைகள் படும் அவஸ்தைகளைப் பார்த்துக்கொண்டிருந்தும், கொஞ்சமாவது இரக்கமின்றி, மேலுமேலும் கொலைசெய்து புசிக்கின்றனரே! அந்தோ!! பரிதாபம்!!! பரிதாபம்!!!

(வரும்.)

V. A. R.

தருணீமணி.

(முடிவுபெறுத கடிதம்.)

(வெண்டாமரை ௳, இதழ் ௮, 177-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆ! கொலையாளி எனச் சொல்லும்போழ்தே என் மெய் கூசுகின்றதே! எல்லா வேலைகளுள்ளும் கொடியததுவே. அத் தொழில் பூண்டவன் பல்லோர் இகழ்ச்சிக்கும் பாத்திரவான் ஆகின்றுன். இருந்தாலும் அவனைக் "கொலையாளி" யெனக் கடிந்துரைத்தால் குற்றம் இல்லை, அவன் கொலைத் தொழில் கைக்கொண்டவன் ஆதலால். ஆனுல், யாதொரு பாபமு மறியாத என்னை என் எளனஞ் செய்தல் வேண்டும்? ஆ! குற்றம் அற்றவர்களைக் குற்றஞ் சாட்டுவதல்லவா அது? தயாபரக் கடவுளே! இது நியாயமா? என் மாமனைக் "கொலையாளி" என்றுல் குற்றமில்லை. குற்றம் அற்ற என்னையு மல்லவோ "கொலைக்காரி" என்று கூப்பிடுகிறுர்கள்! எளியவரும் என்னை ஏச யான் எப்பாதகம் இயற்றி

யுள்ளேன்? யானும் குலத்தினுட் சிறந்த வேளிர் குலத்திலல்லவா உதித்துள்ளேன். அப்படி யிருக்க, என்னைக் கண்டால் குற்றம் என்றும், பார்த்தால் பாபம் என்றும் ஏன் கருதவேண்டும். என்னைப் படைத்த எம்பெருமான் எம் மண்ணிலிருந்து ஏனையோரை யுண்டாக்கினன்? ஏன் இவர்கள் என்னை வெறித்துப் பார்த்து வெறுப்புற்று விரைந்து செல்லல் வேண்டும்? யானும் இவர்கள்போல் தசை முதலியவற்றால் உண்டாக்கப்பட்டவள் அல்லவோ? ஜரை மரணம் முதலிய சம்பத்துக்கள் என்போல் இவர்கட்கும் இல்லையா? ஏன் "தீட்டு" என்று சொல்லிக் கொள்ளவேண்டும்? ஆன்றோர் உரைத்தபடி பெறற்கரிய பெரும்பேறாகிய மானிடப் பிறவியை யடைந்தும் நான் ஏன் இவ்விதம் என் சகோதரர்களால் விலக்கப்படவேண்டும்? மானிடர் யாவரும் சம சுவதந்தரம் உள்ளவர் அல்லவா? ஐயோ! பாழும் உலகமே!—லோக வியவகாரம் சரியாக நிறைவேறும்பொருட்டுக் கற்பிக்கப்பட்டது இந்த ஜாதி வருணாசிரம பேதங்கள் எனக் கூறும் நிராலம்போபநிடத வாக்கியத்தினை மறந்தனையா? மானிட வகுப்பினுட்படாத விலங்கினங்களுட் சிலவற்றையும் நுங்குலத்திருடி கணங்கள் என நீங்கள் போற்றிக் கொண்டாட வில்லையா? மான் மகனல்லனோ ருஷ்ய சிருங்கிமுனியும்? கௌசிகர் குசத்தினின்றுண்டாகவில்லையா? சம்பூகத்தில் இருந்து பிறந்தவர் அல்லவா ஜாம்பூகர்? ஊர்வசியின் வயிற்றிலிருந்து பிறந்தவர் அல்லவா வசிட்டர்? — ஆ! பாழுந் தெய்வமே! —"

"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்று சொல்லிக் கொண்டே ஒருவன் தருணீமணியின் முன்னிலையில் வந்து நின்றான்.

வந்தவன் தான் சோமதத்தன்.

"ஐயா! மன்னிக்க வேண்டுகின்றேன்—" என்று சொல்லிக் கொண்டே தருணீமணி தன் ஆசிரியனை வந்தித்து நின்றனள்.

"உன் கஷ்டம் தெரிந்தே கடவுள் என்னை உன்பால் அனுப்பியுள்ளார். கடவுளை நம்பினோர் கைவிடப் படார் அல்லவா?" என்றான் வந்தவன்.

"என்ன? — ஐயா உங்கள் தயவை யான் என்றும் மறவேன். உங்களாற்றான்—உங்கள் பாலிகா பாடசாலையில் பயின்ற படிப்பினாற்றான் நான் இவ்வளவு தூரம் மானிடத் தன்மையை யடைந்ததும். கல்லாதவர் மிருகமே யாவர் — உங்களுடைய உபகாரமும், எனக்கும் அநேக இடங்களில் சிபார்சு செய்து வேலை கொடுத்து எனக்குப் பணமாகவோ

அல்லது வேறுவிதமாகவோ நீங்கள் வழங்கிய உபகாரத்தை நான் மறக்கக் கூடியவள் அல்ல—" என்றாள் தருணீமணி.

"ஒருவர் உன்மீது பரிதாபங்கொண்டு—"

"ஐயா! என்னைக் கண்டு இரங்கும் ஜனமும் இப்பூமியிலுண்டா? நான் என்ன—ஓர் ஏழை அனாதைப் பெண்—என்னைக் கண்டு யார் பரிதாபங் கொள்வார்?" என்றனள் தருணீமணி.

"அம்மா! தருணீ! வருத்தப்படாதே! ஒருவர் ஒருமாத காலத்தின் முன்பு ஓர் தலையாரியுடன் இங்கு வரவில்லையா? அவர் உன் நிலையைப் பற்றிக் கேள்வியுற்று உனக்குபகாரம் தன்னாலியன்றதைப் புரியக் கருதியுள்ளார். ஆனால் தாமே நேராக இவ் வுபகாரம் செய்யின் நிந்தனைக்குரித்தாகும் என்று பயந்து என்னை உன்பால் அனுப்பினார். —"

"ஆம்! எப்படியேனும் இவ் விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போவதே எனக் கிஷ்டம். ஆனால் பாபம்! கூனன் என் தோழனை விட்டுப்பிரிய நேருமே! என் மாமன் என்னை ஒருகாலும் நேசியான். அவன் இருதயம் கல்லினும் கடினமானது. பாபம்! கூனன் படுங் கஷ்டம்! நான் அவனை விட்டுப் பிரிந்தால்—" தருணீமணி தேம்பியழலானாள்.

நம் வாசகர்களுக்கோர் விண்ணப்பம். நாம் முன்னமேயே சொல்லவேண்டியதோர் சமாசாரத்தைச் சாற்ற மறந்தோம். ஆயினும் பாதகமில்லை. இப்பொழுது சொல்லிவிடுவம். அது என்னவென்றால், நம் சோமதத்தன் தருணீமணியைச் சிலவருடங்களாகக் கண்டதேயில்லை. நம் பாவை தன் பாலப் பருவத்துப் பாலிகா பாடசாலையிற் கல்விபயிலுங் கால் கண்டவன். தருணீமணியோ இப்போது தன் வாலைப் பருவங் கடந்து பதினாறாட்டைப் பிராயத்துப் பருவ மடந்தை ஆயினள். ஸ்மாஹரனையும் (சிவன்) வென்ற சதுரவனிதை எங்கே! கேவலம் கற்றறிந்த மானிடன் எங்கே! சோமதத்தன் நல்ல ஒரு விப்ரன். சகல சாஸ்திர சம்பன்னன். சாதுசங்கச் சேர்க்கை உண்டு. சுகுமாரரால் தாபிக்கப் பெற்ற பரோபகாரச் சங்கத்து அங்கத்தினன். சன்மார்க்க சபையிலும் ஓர் காரியதரிசி. எனினும் சம்ஸ்கிருத கவிகள் போலவே இவனுக்கும் சிருங்காரத்தில் விசேஷ பிரீதி! அது வடமொழி பயின்ற யாவர்க்குமே இயற்கை யானதோர் சாபம் போலும்! ஆகையால் சுலபமாகவே மன்மத சஸ்திரங்களுக்கோர் லக்ஷ்யமாயினன். நாம் இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. சுருங்கச் சொல்லில், நம் சோமதத்தன் தருணீமணி

 225

பால் தன்னிருதயத்தினை யிழந்தவன் ஆயினன். ஆகவே, தருணீமணியைத் தன் வயப்படுத்தக் கருதியே, நம் அந்தணனும் தானாகவே நம் கதாநாயகியைக் காணவந்ததும். இருந்தாலும் சோமதத்தன் நம் சுந்தரியின் சற்குணத்தைச் சரியாய் அறிந்தவன். அவள் தனக்கிணங்காள் என்பதை யறிந்தவன். எனினும் நலஞ் செய்வதுபோல் நடித்து நங்கையை யடைய வேண்டும் என்பதே அன்னவன் கருத்து. நம் கதாநேயர்களிற் சிலர், "என்னேயிது! சூத்திர ஸ்திரீயைச் சற்குணவிப்பிரன் காதலிப்பது கூடுமோ? சுத்த அசம்பாவிதம்!" எனக் கூறக்கூடும். ஆனால் காதலுக்குக் கண்ணுண்டோ! காதல் வெள்ளங் கதித்துப் பரந்து இரு கரையும் புரளுங்காலையில், அந்த வெள்ள வேகத் (Current) தில் சிக்கிய ஒருவன் கரையேறுவது எங்ஙனம்? மேற்படி ஜல வேகத்தில் சிக்கியவனுக்கு, "இது பெரிய மரக்கட்டை! இதனைப்பற்றிக் கரையேறலாம்! இது சிறு துரும்பு, இதனைப்பற்றிப் பயனில்லை" என்ற பகுத்தறிவு தோன்றுமா? சிறு துரும்பே யாயினும் அதனைப்பற்றாது செல்வனா? அப்படியே சிருங்கார ரசத்தில் தலைகால் தெரியாது மூழ்கிய ஒருவன் ஓர் திவ்ய அணங்கைக் கண்ணுற்றால் அவன் நிலைமை என்னென்று நவில்வது!

"தருணீ! உன்னைப்பற்றியும் உன் நிலைமையையும் உன் குணத்தையும் கேட்டு உன்னை நல்ல ஸ்திதியில் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணங்கொண்டு என்னை உன்னிடம் அனுப்பியுள்ளார். சுகுமாரர் மிகவும்—" என்றான் சோமதத்தன்.

"சுகுமாரரா? — அவர் தகப்பனார் பெயரென்ன?" என்று வினவினள் தருணீமணி பரபரப்புடன்.

"கருணாகரர் என்னும் ஓர் பிரபு—" என்றான் சோமதத்தன்.

தருணீமணியின் மனத்துப் பற்பல சந்தேகங்கள் தோன்றி மறைந்தன. கடைசியாக, தன் தையற்பெட்டியி லிருந்ததோர் காகிதச் சுருளை யெடுத்துச் சோமதத்தன் கையிற் கொடுத்தனள். சோமதத்தனும் பின்வருமாறு படிக்கலானான்.

"எனக்கே என் னிறுதிக்காலம் கிட்டியது எனத் தோன்றுவதாலும், வைத்தியர்களும் என் அபிப்பிராயத்தை உறுதிப் படுத்துவதாலும் நான் சீக்கிரத்தில் எம் மிறைவன் றாட்களைச் சேர்வேன் என்பது திண்ணம். ஆகையால் யான் இறந்த பிறகு என் குழந்தை தருணீமணியை....விலாசத்தில் வசிக்கும் கருணாகரர் வசம் ஒப்புவிக்கவும். மேற் சொல்லிய கருணாகரர்க்குச் சுகுமாரர் என்னும் ஓர் பிள்ளையுண்டு. ஆகையால் தருணீமணியும் சுகுமாரரும்......

மேற்சொல்லிய லிகிதம் அழகியதோர் கையெழுத்தில் தீட்டப் பெற்றிருந்தது. பொட்டிடப்பட்ட இடங்களில் எழுதியவரின் கண்ணீரால் கலைக்கப்பட்டுப் படிக்க முடியாததாக இருந்தது. "தருணீமணியும் சுகுமாரரும்" என்ருரம்பித்த வாக்கியத்தை முடிப்பதற்குள் ஏதோ தடைப்பட்டு லிகிதமும் முடிவுபெறவில்லை.

சோமதத்தன் கடிதத்தை மடித்துத் தருணீமணியிடம் கொடுத்துவிட்டான். தருணீமணியும் அதைத் தன் கையற்பெட்டியுள் அடக்கஞ் செய்து பின்னர், "ஐயா! அதை என் அன்னையின் ஞாபகார்த்தமாகவும், அதில் முக்கிய விஷயங்கள் சில இருப்பதாலும் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன். சுகுமாரர் என்ற ஓர் பந்துவை நான் தினமும் எதிர்பார்த்து வருகின்றேன். இந்தச் சுகுமாரரும் ஏதோ என்மீது கவலையெடுத்துக்கொள்வதைப் பார்த்தால் ஏதோ விந்தையாகத்தான் இருக்கிறது" என்ருள்.

சோமதத்தன் யோசனையி லாழ்ந்தனன். "ஆ! ஏன் இப்படிக் கிட்டாத கனிமேல் ஆவல் கொண்டோம்" என மனம் வருந்தினன்.

"எங்கள் மாமா இந்தச் சுகுமாரரைக் கண்டுபிடிக்க எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் யாவும் வீணுகப்போயின. ஏன் தந்தையோ நான் பிறந்த சில மாதங்களுக் குள்ளாகவே மாண்டுவிட்டார். என் அன்னையும் என்னறியாப் பருவத்திலேயே என்னை அகதியாக விட்டு மாண்டனள். அதுமுதல் என் மாமாவே என்னைச் சம்ரக்ஷித்து வருகிருர். —" என்ருள் தருணி.

"தருணீ! உன் தாயார் கடிதத்திலிருந்து உன் தாயார் உயர் குடியிற் பிறந்தவள் என்றும், மகா புத்திசாலி என்றும் தெரியவருகின்றது. ஆழ்ந்துபார்த்தால் சுகுமாரருக்கும் உனக்கும் ஏதாவது பந்துத்வம் இருக்கவேண்டும் என்று நம்புகின்றேன். ஆனல் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. என் வீட்டிற்கு வந்து என் அக்காளுக்கு உடம்பு அசௌக்கியமா யிருப்பதால் ஏதாவது கதை படித்துக்கொண்டும் பாட்டு பாடிக்கொண்டும் துணையாயிரு. உனக்காகத் தோட்டத்திலிருக்கும் "வசந்த கிருகம்"— அதையும் சுத்தப் படுத்தி வைக்கிறேன்" என்ருன்.

நம் நங்கை சோமதத்தன் மனத்திலிருந்த எண்ணம் யாதும் அறிந்திலள். தெரிந்திருந்தால் இதற்கு மனமொப்பி யிருக்கமாட்டாள். இது யாதுந் தெரியாது, ஆகையால், "சரி—" என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் பெருகச் சோமதத்தனை வணங்கி நின்ருள்.

(வரும்.)

R. வாசுதேவ சர்மா.

பால சிக்ஷை.

மனப் பயிற்சி.

(வெண்டாமரை ௩, இதழ் ௮, 167-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடற்பற்றே மனக்கட் டவிழ்தற்குப் பிரதம காரணமாகும். ஆன்மா, யாக்கை இவ்விரண்டின் கூட்டுறவே மானுடப் பிறப்பு. ஆன்மா, பரஞ்சோதியின் சுடராய், ஈசுவர சொரூபியாய், நிர்மல வடிவாயுள்ளது. உடலோ மிருகத்தின் இயல்பும் உருவமுமுடையது.

வினையில் வந்தது, வினைக்கு விளைவாயது எனவும், ஐவர் கலகமிட் டலைக்கும் கானகம், இருவினைப் பெட்டகம், பவக்கொழுந்தேறுங் கவைக்கொழு கொம்பு எனவும், வன்புலை யுடம்பே யாவி வருத்திடும் பிணி வேறில்லை எனவும், யாக்கையி னியல்பைப் பலபலவாறு விளக்கியிருக்கின்றனர் ஆன்றோர். ஆதலின், மனம் உடல் வசப்பட்டு ஆசைக் கயிற்றிலாடும் பம்பரமாகா வண்ணம் சிறுவயதினின்றே பழக்கிவரவேண்டும். உடல், பொருள் இவைமீது அமிதமான பற்றுள்ளோரது மனம் சூறைக்காற்றி லகப்பட்ட சருகுபோலச் சுழன்றே திரியும். உடல் வலியை யழித்து, மனோபலத்தை வளர்ப்பதற்கென்றே, அன்னபானாதிகளைச் சுருக்கியும் யாக்கையைப் பலவாறு வருத்தியும் வருவர் மேலோர். உடல் வலி யெத்துணைத்தாயினும் மனோபலத்தினால் அதனை யடக்கியாளும் ஆற்றல் நமக்குண்டென்பதற்கு ஐயமொன்றுமின்று. உதாரணமாக, ஒருவர் மனம் முக்கியமான கருமமொன்றில் ஆழ்ந்து நிற்குமளவில், அவர்க்குப் பசி, தாகம், களைப்பு, நித்திரை முதலிய தேக சம்பந்தமான வாதைகளொன்றும் தோன்றாதிருத்தலை நாம் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? ஆற்றொணா வுடல் நோய் எதுவுறினும், மனோதைரியமுடையவர்கட்கு அகமு முகமும் நகுமாறு இருக்கவும் இயலும். போர்க்களத்தில் குண்டுபட்டு முறியுண்ட கையையோ காலையோ சத்திரப் பிரயோகம் செய்யும்போது, இத்தகைய தாங்கொணாத் துயரைச் சுருட்டுப் பிடித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் பொறுத்து நின்ற வீரர்களின் மனோதைரியச் செயல்களெத்தனையோ நம் செவிப்பட்டிருக்கின்றன. நம் முன்னோர்களின் மன வலியை எண்பிக்கும் வீரச் செயல்கள் எண்ணில நாம் நூன்முகமாக அறிந்திருக்கின்றோம். போர்முனையில் அம்பறாத் தூணியில் கணைதீர்ந்தொழியின், பகைவர் அம்பு தம் மார்பிற் பாயின் அதையேனும் எடுத்து அவர்மீது தொடுத்து எய்தற்காக மார்பைக் காட்டி நின்றவர்கள் பூர்வ இந்தியர்களன்றோ? முதுமரப்

228

பொந்துபோல முழுமையும் புண்களுற்று நிலமகள்மீது சாயும்போதும் தொடுத்த பாணத்தை விடுத்தாலன்றி உயிர் நீங்காமல் நின்ற வீரர்கள் நம் பூர்வ இந்தியர்களன்றோ?

இக்காலத்தில் இந்தியர்களிடத்தில் மனவலி முற்றும் அழிந்தொழிந்ததற்கு முறைக்கேடான மனப்பயிற்சியே காரணமென்க. தொட்டில் முதல் இடுகாடுவரையில் பயம் பய்மென்னும் பாழ்விலங்கால் கட்டுண்ட நம் மனம் வலியுறுதல் எங்ஙனம்?

ஒருவர்க்கு மனவலி யெத்துணையுளவோ அத்துணையே அவர்க்கு அறநெறியில் கலங்காது நிற்க இயலுமாதலின், குழந்தைகளிடத்தில் மனோபலத்தையெழுப்பி அதை விருத்திசெய்து வருவதே நாம் அவர்களை வளர்க்குமுறையில் அனுசரிக்கவேண்டிய முக்கிய உபாயமாகும்.

அந்தோ! நாம் குழந்தைகளை வளர்க்குமுறையை அகக் கண்ணால் சற்று உற்று நோக்கில் அவர்கள் மனவூக்கத்தை அழிக்கக்கூடியவைகளெல்லாம் செய்துவருகின்றோமேயன்றி அதை விருத்தி செய்வதற்காக ஒரு சிறிதும் முயல்கின்றோமல்லேம். இது செய், இது செய்யாதொழி என்று பயத்திலும் நயத்திலும் அவர்கள் நாம் சொல்வதைச் செய்யமாத்திரம் உடன்படுத்தி வருவதால் ஒரு கருமத்தைத் தாமே யெண்ணித் துணிவதற்கு எவ்வாறு பழகுவார்கள்? வயது முதிர்ந்து, அகப்பற்றும் புறப்பற்றும் இரு கண்ணையும் புதைத்துவைத்த பின்னர், செய்தற்பாலதெது, தவிர்த்தற்பாலதெது என்பதைப் பகுத்தற்கு அறிவும், நிதானித்ததைச் செய்து முடித்தற்கு மனத்திடனும் எங்ஙனம் அவர்களிடத்திற் பிறக்கும்? தாமே ஒரு கருமத்தைச் சுயேச்சையாகச் செய்து முடிக்கும் இயல்பும் அவர்களிடத்தில் அற்றுப்போகின்றதன்றோ? ஆதலின், சிறு வயதினின்றே உபதேச முகமாகவும் ஆஞ்ஞை முகமாகவும் மாத்திரம் போதிப்பதைத் தவிர்த்து, ஒவ்வொரு செய்கையின் இயல்பையும் தாமே யூகித்து அறிய அவர்களைப் பயிற்றிவரவேண்டும். செய்யவேண்டுவது இதுதானென்று நிதானித்தறிந்தபின், எதுவரினும் அதையே செய்து தீரும் மனவுற்சாகத்தைச் சிறுசிறு செய்கைகளிலும் அவர்களிடத்தில் உண்டாகுமாறு செய்துவருதல் மனப்பயிற்சிக்கு இன்றியமையாததாகும்.

(வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

தமிழின் பெருமை.

(வெண்டாமரை ரு, இதழ் அ, 174-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும் மாலயற்கரியார் தமிழ்ப்பாடல்களை மாலையாகத் தமது அவயவங்களில் அணிந்துள்ளார். பாதத்தில் அணியப்பெற்றிருத்தற் குதாரணம் :—

* "செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந் தெழுந்து நின்று, தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத் தொடையணிந்து துதித் துப்போந்தே"

‡ "பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப் பத்திபடப் பாப் பித்திக்கு, முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண் மூர்த்திதாளில், தொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல் சூட்டவ ரிச் சுரும்புந்தேனுங், கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா ளடி முடிமேற் கொண்டுவாழ்வாம்."

புயத்தி லணிந்துள்ளார் என்பதற்கு உதாரணம் :—

$ "ஆவேறு மையர்செம் மாணிக்க மாமலை யாளர்மலர்
மேவேறு கூந்தல் வலைச்சியர் போகம் விரும்பியன்றோ
நாவேறு நால்வர் தம் பாவேறு மாலை நலமணக்குந்
தூவேறு தோளிற் புலவார் வலைமுன் சுமந்ததுவே."

$ "முதுமறையுணர்ந்து கவுணியர்முனன்பர் மொழிதமிழலங்கன் முற் [றப்புனைந்தன
....
அரதனவிலங்கன் முடியமர்தழும்ப ரரசமையிலிங்கர்வெற்றிப்புயங்களே."

அங்கத்தில் ஒவ்வொரு பாகத்திலு மணிந்திருக்கிறார் என்பதற் குதாரணம் :—

¶ "மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
வற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்."

---

* திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் புராணம், செய்யுள் 307.

‡ திருவிளையாடற் புராணம். $ வாட்போக்கிக் கலம்பகம்-81, 9.

¶ தடுத்தாட்கொண்ட புராணம் 70.

230

இன்னும் அழல்நிற வண்ணர், செந்தமிழ்ப் புலவர்களுக்கு நற்கதி யளித்துள்ளார். இதற்கு உதாரணம் எடுத்துக் காட்டப்புகின் பத்திரிகை இடந்தராதாதலின் ஒரே உதாரணங் காட்டி மேற்செல்லுவேன்.

தென் கயிலைநாதர் "கைலைபாதி காளத்திபாதி" என்னு மந்தாதி பாடியருளிய வம்மாத்திரையிலேயே நக்கீரருக்கு வீடுபேற்றை யளித்தார்.

% 1. கயிலை வேறு காளத்தி வேறென் றெண்ணுங் கருத்திலனுய்க்
கயிலை பாதி காளத்தி பாதி யாகக் கலந்துறழ்ந்து
மயலில் கரும்பா மொழிபாகன் மகிழ வெண்பா வந்தாதி
மயிலில் வருவோன் பேரருளால் வந்த புலவன் பாடினன்.

% 2. பாடும் புலவன் றனக்கொருதான் பரிசு கொடுப்பத் திருவுளங்கொண்
டாடும் பெருமா னெதிர்நின்றே யறைதி வேண்டிற் றெனவுடம்பு
கூடும் பிணியிங் கொழித்தவருட் குன்றே யென்று பேறிவை
மூடும் பிணியுங் களைந்துனது முளரித் தாட்கீ ழிருத்தென்றான்.

% 3. அந்த மாதி யிலாக்கயிலை யமர்ந்த பெருமா னந்தாதிச்
சந்த மாலைப் புலவனது சத்தி பாதத் துயர்ச்சியால்
பந்த பாச மறமாற்றிப் பன்றி யுருவாய்க் காண்பதற்கு
வந்த மாலு மறியாத மலர்த்தா ணிழலி லிருத்தினன்.

இம் மூன்று பாடல்களுமே அதற்குச் சான்று பகருமென்க.

நம்மை யடிமைகொளும் மாதேவர், இமயமலையில் நம் மம்மையைத் திருமணம்புணர்ந்த ஞான்று, பூமி தன் னிலையினின்று பிறழ, அதை நன்னிலையில் நிறுத்தும்படி அகத்திய முனிவரை யனுப்ப, அவர் நம் சிவக்கொழுந்தீசரைப் பார்த்து, "நான் செல்லும் நாடு தமிழ் நாடு அன்றோ, அங்கே தமிழ் வல்லா ரநேகரிருப்பர், எற்குத் தமிழினியல் தெரியாது" என்று விண்ணப்பிக்க, சுவாமி அம் முனிவர்க்குத் தமிழிலக்கணத்தை உபதேசித்தருளினார்.

* "விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொன்
மடம கட்கரங் கென்பது வழுதிநா டன்றோ."

என்ற பாடலும் இங்குச் சிந்திக்கற்பாலது.

---

70. % சீகாளத்தி புராணம், நக்கீரச்சருக்கம்.
* திருவிளையாடற் புராணம்.

எனவே, இத் தமிழ் கடவுளாலேயும் ஓரிலக்கண வரம்பினை எற்படுத்தப்பட்டது என்பது தெரிந்தாம். அம்முனிவர் கைலையாளியிடங் கேட்ட தமிழினியிலே 'அகத்தியம்' என்ற பெயரானே ஒரு நூலாகத் திருவாய் மலர்ந்தருளினர். அப் பேரிலக்கணம் இப்பூவுலகிற் றேன்றுவதற்கு முன் தமிழில் இலக்கணமில்லை என்று வாதாடுவோருமுளர். அவர்க்கு, "பிற்காலத்திய விலக்கண நூலாகிய நன்னூல் தோன்றுவதற்கு ஆரம்பமானவுடன், அகத்தியம், தொல்காப்பியம் முதலியன படிப்பது நின்றுபோய், அகத்தியமென்ற நூல் கிடைப்பதற் கரிதாய்விட்டது போல், அகத்தியம் தோன்றிய பிறகு அதற்கு முன் வழங்கியுள்ள விலக்கணங்களெல்லாம் வழங்குவது நின்றுபோனபடியால் இறந்துபோயின" என்று மறுமொழி யுரைத்தல்வேண்டும்.

அத்தமிழ் இயல், இசை, நாடகம் என முப்பாற்று.

† "சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்றது அறியற்பாலது.

இன்னும் அத்தமிழ் முச்சங்கங்களா லாராயப்பெற்றுளது. முதற் சங்கம்: — திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், அகத்தியர் முதலியோரும் தமி ழாராயப்பெற்றது.

இரண்டாஞ் சங்கம்: — அகத்தியனர், தொல்காப்பியனர், துவரைக் கோமான் முதலியோரான் தமிழ் ஆராயப்பெற்றது.

மூன்றாஞ் சங்கம்:— இறையனர் எனும் நம் மாலவாயார், நக்கீரர், கபிலர், பரணர் முதலியோரால் தமிழ் ஆராயப்பெற்றது.

அக் கடைச்சங்கத்துப் புலவர்களில், நம்மிறையனர் ஒழிய மற்றைய நாற்பத்தெட்டு புலவர்களும், வடமொழிக்குள்ள எழுத்துக்களில் நாற்பத்தெட்டு எழுத்துக்களின் அவதாரம் என்று வடமொழி ஆலாஸ்ய மகாத்மியம் கூறுகின்றது. ஆதி பாஷையென்றும், ஒப்புயர்வில்லாத தென்றும் சிலரால் கொண்டாடப்பெறு மிவ் வடமொழி யெழுத்துக்களில் நாற்பத்தெட்டு எழுத்துக்கள் கூடலின்கண்ணே நாற்பத்தெட்டு புலவர்களாகத் தோன்றித் தமிழாராய்ந்து தங்குறை போக்கிக்கொண்டார்கள் என்று வடமொழிப் புராணமே கூறுமாயின், வடமொழி தமிழினு முயர்ந்ததென்று கூறுவாருரை மேம்படுமாறு எங்ஙனம்?

(வரும்.)

ப. தி. சோ. குமாரசாமி.

---

† நல்வழி.

நமது நங்கையர்கள்.

(ஓர் புதிய கிளர்ச்சி.)

(வெண்டாமரை ந, இதழ் அ, 170-ம் பக்கத் தொடர்ச்சி.)

"பெண்பால் மானிட சமூகத்தில் ஒரு முக்கிய பகுதியா யிருக்கின்றாள். பெண்பால்தான் உலகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாகின்றாள். அத்தகைய பெண்பால், தோகையர் தூய்மையோடிருக்குந் தன்மை சிறப்பாயமைந்துள்ள நமது நாட்டில் என்ன நிலைமையிலிருக்கின்றாள்? மிகக் கொடுமையான சுய நலக் கடலில் ஆழ்ந்திருக்கின்றாள். நமது சமூகத்தின் கடுமையான அவநம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் பாத்திரமாயிருக்கின்றாள். விசால சித்தங்கொண்டோர் தூ தூ வென் றிகழ்தற்குரிய, வெறும் வெட்கத்துக்குரிய பல விசித்திரக் கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும் வாழ்க்கைக்கும் உட்பட்டிருக்கின்றாள்" என்பவைதான் சென்ற மாதச் சஞ்சிகையில் சாற்றியவையின் சாராம்சம். தேசத்தின் செழுமை, ஜனங்களின் தேசப் பொலிவு, கம்பீரம், சித்தத் தெளிவு, மனத் தூய்மை, மனத்திடன் முதலிய நன்னலங்களை நாசமாக்கிப் பெரும் பரிதாபத்திற்குரித்தான மூதேவி மயத்தில் யாவும் முயங்கி யிருக்குமாறு செய்துவிட்ட முக்கிய பிசாசங்க ளெவை? சமூகத்தின் தன்மையை அமைக்கும் சக்திவாய்ந்த நங்கையரிடத்தில் நாம் கொண்ட சந்தேகமும் அவநம்பிக்கையும், அவைகளின் காரியங்களான பல இழிந்த கொள்கைகளும் ஆசாரங்களுமே. இவைகளின் இழிவையும் கொடுமையையும் இவைகளால் தேசத்திற்கு விளைந்த நாசத்தையும்பற்றிச் சாங்கோபாங்கமாய்க் கூறவேண்டுமாயின் அதற்காகப் பிரத்தியேகமாக ஒரு வியாசமெழுதல்வேண்டும். சமயம் வாய்ப்பின் மற்றொரு முறை அவ்வாறு புரிவோம். இப்பொழுது நமது பெண்களின் நிலைமையின் ஏனைய பகுதிகளை எடுத்துரைப்போம்.

கல்வி! கல்வி! அது ஒரு அற்புத விஷயம். அஃது அறிவிற்குக் கண். சமூகத்திற்குக் கண் பெண். ஆகையால், அந்தக் கண்ணாகிய கல்விக்கும் இந்தக் கண்ணாகிய பெண்ணுக்கும் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை ஆராய்வோம். "அடுப்புக்கட்டிக்கு அழகு வேண்டுமா! சமையலறையில் சட்டி சுரண்டுகிறவளுக்குச் சாஸ்திரமென்னத்திற்கு! எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்திதானே. அறப்படித்தவள் அவிசாரியாவாள். உள்ளேயிருக்கும் குமரி படித்தால் கள்ளப் புருஷனுக்குக் காகித மெழுதுவாள்"

என்றவாறு இந்த நிர்ப்பாக்கிய நாடெங்கும் வியாபித்திருந்த கேடுகெட்ட மொழிகளும் கொள்கைகளும் வரவர வலிகுன்றிட, அவைகளின் பொய்மையை ஜனங்கள் உணர்ந்து வருகின்றார்களென்பது மெய்யே. பெண்கள் கற்கக் கூடாது என்ற கொள்கையினோர் அதிதுரிதமாகக் குறைந்து வருகின்றார்கள். தங்கள் ஆண்குழந்தைகளை மாத்திரம் பாடசாலைக் கனுப்பிப் பெண்குழந்தைகளை அனுப்பாதிருக்கும் பெற்றோர்களின் தொகை குறைந்துவருகின்றது. ஆனால் படித்தவர்களென்று அழைக்கப்படுகின்ற நமது பெண்கள் யதார்த்தத்தில் அடைந்துள்ள கல்வி யறிவின் அளவை நிர்ணயித்துப் பார்க்கலாம். படிக்கிற பெண்கள் சாதாரணமாகப் பத்துப் பன்னிரண்டு வயது வரையில்தான் பாடசாலைக்குப் போய்ப் படிக்கிறார்கள். அதற்குமேல்தான் அவர்கள், கல்யாண தக்ஷிணை கொடுக்கல் வாங்கல்கள், கல்யாணச் சடங்கு, நிஷேகச் சடங்கு, ஆளனோடு வாழ்தல், மாமி மருகி மனஸ்தாபங்கள், சீமந்தச் சடங்கு, பிரசவச் சடங்கு முதலிய இல்லற வியவகாரக் கல்விகளிற் பாண்டித்தியம் பெற்று இல்லறம் நடத்துதற்காவது, அல்லது அடுப்பங்கறையில் அவிந்து புழுங்கி ஏங்கி யிருப்பதற்காவது தங்கள் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்யவேண்டுமே. ஆகையால் எப்படிப் படிக்கமுடியும்! எங்கே படிக்கிறது! ஐயோ அம்மணீ! லோகநாயகீ! சாரதே! இவ் விஷயங்களை நினைக்க நினைக்க எனக்கு என்ன ஆத்திரம் பொங்குகிறதம்மா! மிகப் பாலியத்திலேயே முற்கூறிய இல்லற வியவகாரங்களை எங்கள் பெண்களுக்கு உபதேசித்து அவர்களை அந்த வியவகாரங்களில் தள்ளிவிடுவது, இவ்வாறு தள்ளிவிடப் பெறாத கன்னிகைகளைச் சிறையிலடைத்து நிர்ப்பந்திப்பது முதலிய வழக்கங்களையெல்லாம் தொலைத்து, ஏ தாயே! உன் புத்திரிகளாகிய இந்தத் தமிழ் நாட்டுப் பெண்களைத் தக்க அந்தஸ்திற்கும் உன்னத வாழ்விற்கும் எப்பொழுது உயர்த்துவையோ! — ஆ இதென்ன விநோதம்! நமது நங்கையர்க் கேற்பட்டிருக்கும் ஆசாரங்களை முன்னமே சுருக்கமாகக் கூறிவிட்டு அவர்கள் கல்வியின் நிலைமையை ஆராயப் புகுந்தால், மீண்டும் இந்த இறகு என்னை அந்தப் பழைய ஆசார விஷயத்திற்கே இழுக்கின்றதே. சகோதரி சகோதரர்கள் சற்று மன்னிப்பார்களாக. இனி, இப்பொழுது எடுத்துக்கொண்ட நமது பெண்கல்வியைப்பற்றிப் பேசுவோம். படிக்கிற பெண்கள் சாதாரணமாய்ப் பத்துப் பன்னிரண்டு வயது வரையில் தான் பாடசாலைக்குப் போகின்றார்கள். அதுவரையில் அவர்கள் என்ன கற்கின்றார்கள்? சுய பாஷையைப் படிக்கவும் எழுதவும் இலக்ககணிதம் பூகோளசாஸ்திரம் தேசசரித்திரம் இவைகளில் சொற்ப ஞானமும் தையல் முதலிய சில சித்திரத்தொழிலில் சிறிது விற்பனமும் அடைகிறார்

கள். சிற்சில பெற்றோர்களோ தங்கள் பெண் குழந்தைகளுக்குப் பிரத்தியேகமாக வீட்டில் உபாத்தியாய ரமர்த்திச் சங்கீதமும் அவர்களுக்குக் கற்பிக்கின்றார்கள். இவர்கள் பெறும் சங்கீத ஞானத்தின் அளவையும் சற்று நிர்ணயித்துவிடுவோமே. சங்கீதத்தின் உபக்கிரம (ஆரம்ப) சித்தாந்தங்களிலும், சிலகாலமாக நவீனமாக முளைத்திருக்கும் ஹார்மோனியம் என்ற பெரு நாத வாத்தியம் வாசிப்பதிலும் சிறிது ஞானமே. இவ்விஷய சம்பந்தமாகச் சில வார்த்தைகள் கூறச் சமயம் வாய்த்துள்ளதால் அதை உபயோகிக்கின்றேன். இந்த இடத்தில் இக் கூற்று மிகையாகுமெனக் கொள்ளுவோரது க்ஷமிப்பினைக் கோரியே கூறலாகின்றேன். இசைக்கருவி விற்பனம் பயிலும் நமது பெண்களில் பெரும்பான்மையோர் ஹார்மோனியமே பயில்கின்றனர். பிடில் என்னும் கருவியிற் பயில்வார் சிலர். ஆனால், என்றுந் தெவிட்டாத அமிர்தத்தைச் செவிகளில் ஊற்றுகின்ற நிகரற்ற நுண்ணிசையைத் தரும் வீணை என்ற நமது பண்டைக்காலத்துக் கருவி வாசிக்கப் பயிலும் பெண் ஒருவருமேயில்லை யென்றுஞ் சொல்லிவிடலாம். வீணை நாதத்தைக் கேட்டிருப்பவர்களுடைய தொகையைக் கணக்கிட்டால் விரைவில் விரல்விட் டெண்ணிவிடலாம். ரவிவர்மன் என்ற சித்திரன் வீணையைத் தாங்கி விளங்கும் சரஸ்வதி படம் சித்திரித்திராவிடில் வீணையின் உருவங்கூட நமது ஜனங்களின் மனத்திற் படிந்திராது. தற்காலம் "நாவல்கள்" என்ற கட்டுக்கதை எழுதுவோர் பலர் தங்கள் கதைகளில் வீணையைப் பற்றிப் பேசுகிறார்கள். அதைக் காண்பாரிற் பலர் என்ன கருதுகிறார்கள்? இவ்வுலகில் அடைதற்கரிய பாரிஜாதமலர் கற்பக விருட்சம் காமதேனு முதலியவைகளை அமைத்து உற்சாகக் கதைகள் எழுதுவதுபோல் வீணையையும் கதையிற் சேர்த்து எழுதியிருப்பதாகத்தான் கருதுகிறார்கள். ஒருகால் அக் கதைகளின் ஆசிரியர்களும் அவ்வாறுதான் கருதி எழுதினார்களோ என்னவோ! ஐயோ வீணையே! சாரதாதேவியின் பிரியாத் தோழியே! உன்னையும் மறந்த மாந்தர்களின் மதி என்ன மதியோ! நீ மீண்டும் இத் தமிழ்நாட்டுப் பெண்களின் மடியிலும் கரங்களிலும் தவழ்ந்து விளையாடுவது எக்காலத்திலோ! எக்காலத்திலா! சமீபகாலத்தில்தான் என்று என்னவோ ஒன்று என் சித்தத்திற் பேசுகின்றது. தமிழ்ச் சகோதரிகளே! சங்கீதம் பயிலுஞ் சகோதரிகளே! வீணையை ஆதரித்து அதற்குப் புதிய உயிர் கொடுத்து அதனோடு குலவியிருங்கள். அஃதொன்றே உங்கள் நிலைமை உயர்வடைதற்குப் பெரியதோர் மங்களச் சகுனமாகும். வீணைவாசிக்கக் கற்றுக்கொள்வது அநேகமாய் அசாத்தியமான காரியமென்றும் சங்கீத சாஸ்திரத்தில் மிகச் சிறந்த ஞானமுடையவர்களே

வீணையில் "ச ரி க ம ப த நி ச" என்ற சரளி வரிசையை வாசிக்கக் கற்றுக் கொள்வதற்குமாத்திரம் பன்னிரண்டு வருடங்களாகும் என்றவாறு பல கதைகள் இக் காலத்தில் பரவியிருக்கின்றன. அவைகளை நம்பி அதைரியப் படாதீர்கள். வீணை பயில்வது பிடில் பயில்வதைவிட அதிகச் சுலபமானது. ஹார்மோனிய மவ்வளவு சுலபமென்றுஞ் சொல்லலாம். ஆனால் அது அளிக்கும் இசையின் இன்பத்தை மாத்திரம் எந்த இசைக் கருவியும் கொடுக்க வியலாது.

சாதாரணமாக நமது பெண்கள் பெறும் படிப்பின் அளவைக் கூறினேம். தனிமரம் தோப்பாகுமா! பசித்தவன் பருக்கை நாலைந்து புசித்துவிட்டால் அவன் பசியாறினவனாவானா! அமாவாசை இருட்டில் சில மின்மினிப் பூச்சிகளிருந்துவிட்டால் அந்தகாரம் அகன்றிடுமோ! படிக்கவும் எழுதவும் கூட்டல் கழித்தல் முதலிய கணக்குகளும் சங்கீதம், தையல் முதலியவைகளில் சிறிது ஞானமும் அடைந்துவிடுவதையும் கல்வி என்றழைக்கலாமா! ஆனால் இவைதான் நமது நாட்டிலுள்ள பெண் கல்வி. இந்தப் பெண்கல்வியோடு நாம் மிகத் திருப்தியடைந்திருக் கிறோம். இந்தக் கல்விக்குமேல் ஏக நமது பெண்களுக்கு இயலாமலிருக் கிறது. ஏனென்னில், அவர்கள் படிப்புப் பருவம் பத்துப் பன்னிரண்டு வயது வரைதான். இந்தப் பெண்கல்வியால் விளைந்திருக்கிற பயன்களை யாவரும் ஆலோசித்துப் பாருங்கள். இவ் விஷய சம்பந்தமாக ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதைக் கூறுகின்றேன்:—

"...... மேற்கூறியாங்குக் கல்வி கற்ற காரிகையர் பலரிடத்துச் செருக்கு ஜனித்துவிடுகின்றது. அவர்கள் தாங்கள்தான் அதிசயமாய்க் கல்விகற்றவர்களென்றும் தங்களைப்போல் யுக்தி புத்தி யுடையார் இருப்ப தரிதென்று மெண்ணிக்கொள்ளுகிறார்கள். தங்களைவிட அதிகமாய்க் கற்றவர்களைக் காணின், அன்னோர் நட்பை இருதய பூர்வகமாய் விரும்பு வதில்லை. உண்மையில், அவர்கள் அகத்தில் மற்றோர் தங்களைவிட அதிக மாய்க் கற்றிருக்கிறார்களே என்ற பொறாமையே குடிகொண்டிருக்கும். தங்களைவிடக் குறைந்த கல்வி யுடையார்பாலோ, தங்கள் கல்வித் திறத் தைக் காட்டுகிறார்கள். கல்வியின் வாசனையே அறிந்திராத தங்கள் சகோதரிகளை உபேட்சிக்கிறார்கள். ......"

ஆ! எவ்வளவு வெள்ளையாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன நமது தற்காலப் பெண்கல்வியின் காரியங்கள். திமிர்ந்த கல்வியால் அமையப் பெறும் பெருந்தகைமையும் அறிவு விசாலமும் பத்துப் பன்னிரண்டு வய துக் குறுகிய படிப்புடையாரைக் கிட்டுமா! இவர்கள் அற்பப்படிப்பு இவர்

களுக்கு அளிப்பது அற்ப குணமாகிய அகந்தையே. சீ! என்னம்மா! இந்தப் படிப்பும் ஒரு படிப்பாகுமா! இலக்கியத்தின் சுவையைச் சற்று அறிந்து, எளிய நடையிலேனுமுள்ள ஒரு நல்ல காவியம் அல்லது வேறு வித இலக்கிய நூலைத் தங்கள் அவகாச நேரங்களில் வாசித்து உண்மையாக ஆநந்திக்கும் சக்தி இருக்கிறதா நமது படித்த பெண்களுக்கு! ஆனால் கம்பன், திருக்குறள் முதலிய விஷயங்களைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து தாங்கள் அவைகளின் பெருமைகளைக் கரைகண்டுவிட்டதாகப் பேசுவார்கள். உண்மையில் கம்பராமாயணத்தில் ஒரு செய்யுளையாவது திருக்குறளில் ஒரு அதிகாரத்தையாவது, அவைகளுக்குத் தெளிவான எளிய நடையில் உரையிருப்பினும், வாசித்துணரப் பொறுமையிராது. எப்படியிருக்கும்! அவைகளின் உருசியை உணர்ந்திருந்தால் வாசிப்பதில் இன்பமிருக்கும். அவ் வின்பமிருந்தாலல்லவோ வாசிக்கப் பொறுமை வரும்! உருசியே யில்லாவிட்டால் அந்த இன்ப மேது பொறுமை யேது!

(இன்னும் வரும்.)

குறிப்பு. இவ் வியாசத்திற் சொல்லப்பெறும் விஷயங்கள் எவர் அபிப்பிராயத்திற்கேனும் பொருந்தாதிருப்பின் அன்னோர் அவற்றை மறுத்துத் தங்கள் ஆக்ஷேப சமாதானங்களை வெளியிடுமாறு கோருகின்றேன்.

மங்களம்.

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

ஈ. குணமாலையா ரிலம்பகம்.

இராசமாபுரத்திலே சீவகன், காந்தருவதத்தையோடு கூடியினிது வாழ்ந்திருந்தான். இப்படிச் சிலநாள் சென்ற பின்னர், இளவேனிற் காலம் வந்தது.

54. தோடணி மகளிர் போன்ற துணர்மலர்க் கொம்பர் கொம்பி
னாடவர் போல வண்டு மடைந்தன வளியிற் கொல்கி

54. பூவையணிந்த மகளிரை யொத்தன பூங்கொம்புகள்; அவரிடத்து ஆடவ ரடையுமாறுபோல அக் கொம்புகளிலே வண்டுகளு

யூடிய மகளிர் போல வொசிந்தன வூட நீர்க்குஞ்
சேடரிற் சென்று புல்லிச் சிறுபுறந் தழீய தும்பி.

கொம்பிலே குயில்கள் கூவ எல்லாரும் குடைந்து விளையாடும் வாவியிலே வண்டும் தும்பியும் பண்கள் பாட வந்த வேனிற் பருவத்திலே, அந்நகரத்துள்ளார் நீர்விளையாட்டைக் கருதி மிகச் சிறப்பொடு சென்று நகர்ப்புறச் சோலையை யடைந்தனர்.

அங்ஙனம் சென்றவர்களுள், குணமாலை, சுரமஞ்சரி என்னும் பெயரிய நங்கையரிருவர், அப் பூமரக்காவிலே திரையை வளைத்து அதனுள்ளே பூவையும் கிளியு மிழற்றப் புகுந்து அரமங்கையர்போன் றிருந்தனர். அவர்கள் அப்பொழுது சுண்ணம் (வாசனைப் பொடி) காரணமாகத் தம்முள் மாறுபட்டு, தஞ் சுண்ணங்களுள் நல்லதை அறிஞரால் அறிந்துவரும்படி கனகபதாகை, மாலை என்னும் தந் தோழிய ரிருவரை யனுப்ப, அவர் அவ்வாறே அறிஞர் பலர்க்கும் அவற்றைக் காட்டினர். கண்ட அவர், "இவ்விரண்டும் நல்ல சுண்ணம், இவற்றின் நன்மையறிய விரும்பின் சீவகனுக்குக் காட்டுங்கள்" என்றனர்.

அங்ஙனமே தோழியர் சீவகன் மாட்டுச் சென்று அவற்றைக் காட்டி, "அண்ணலே! இச் சுண்ணங்களைச் சூழ்ந்தறிந்து இவற்றுள் நல்லனவற்றை எங்கட்குக் கூறியருளுக. நின்னையொழிய மாந்தரனைவரும் தீண்டியும் மோந்தும் நோக்கியும் ஆராய்ந்து வேறுபாடு கூறாது இவ்விரண்டும் நல்ல சுண்ணமென்று புகழ்ந்துவிட்டார்; நூற்கடலே! இவற்றின் வேறுபாடு சீவகனே அறிய வல்லவனென்று பிறர் கூறக் கேட்டு வந்தேம்; அவர் கூறிய வார்த்தை மெய்யாம்படி நின்னறிவைக் கூரிதாக்கி ஆராய்ந்து உரைத்திடுக" என்று கைகூ ஹற்றெழ த்தார்கமழ் கோதையார்.

அது கேட்டுச் சீவகன், குணமாலை சுண்ணம் நல்லவையென்றும், சுரமஞ்சரி சுண்ணம் சிறிது நல்லவை யல்லவென்றும் செப்பி, அதற்குக் காரணம் என்னவென்று கேட்பீராயின், நல்ல சுண்ணம்

மடைந்தன; அவ் வாடவரிடத்து ஒல்கி யூடிய மகளிரைப்போலே அவ் வண்டின் கனத்திற்கு அக் கொம்புகள் ஒருபக்கத்தே தாழ்ந்தன; அவர் சிறுபுறத்தைத் தழுவி ஊடலைத் தீர்த்து எதிர்முகமாக்கும் பெரியோரைப்போல வண்டுகள் சென்று அங்ஙனம் உயர்ந்த சிறுபுறத்தைத் தழுவி ஒக்க நிறுத்தினவென்க.

சிறுபுறம் – உயர்ந்த பக்கம். சேடர் – இங்கு அறிவிற் பெரியோர்.

கோடையி லிடித்தவை, நல்ல வல்லாதவை மாரியி லிடித்தவை என்று வழுத்தினன்.

55. வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவா
மோரும் வையத் தியற்கையன் றேவென
வீர வேனெடுங் கண்ணி விளம்பினள்.

"வள்ளலே! நீ கூறிய தீங்குகளை என்னுள்ளம் கொள்ளும்படி அறிவித்த பின்னரல்லது போகப் பெறாய்; நின்னை யான் தடுத்தேன்" என்று அவள்கூற, அதுகேட்டு அவனும், "சான்றாலுணர்த்தினால் உள்ளந் தெளிக" என்றுரைத்தான். அவள், "அண்ணலே! நின் சொல்லை மக்களினும் வானவரினும் கடந்தறிவாரில்லை. ஆதலால் அவர்களை யொழியத் தம்மினத்தில் ஒன்றையொன் றழைத்த சொல்லை யறிந்து அதிலே பயின்ற பறவை முதலாக இதனைத் தீதென்று நீக்குமாயின் அதனைக் கொள்வேன்" என்றாள். அங்ஙனம் உடன்படுதலின் சீவகன் தோழியை நோக்கி, "பொன்னனையாய்! காவில் வாழ்வன நான்கு சாதியுள, அவை நடுவா யுணர்த்தும்" எனக் கூறி,

56. மங்கை நல்லவர் கண்ணு மனமும்போன்
றெங்கு மோடி யிடறுஞ் சுரும்புகாள்
வண்டு காண்மகிழ் தேனினங் காண்மது
வுண்டு தேக்கிடு மொண்மிஞி றீட்டங்காள்.

---

55. கனகபதாகையென்னும் தோழி, ஒருவர்மேல் அன்புற்ற காலத்து அவர் செய்யுந் தீங்குகளும் நல்லவையாம்; அன்பின்றி யிருந்த காலத்து அவர் செய்யும் நன்மைகளும் தீயவாம்; இஃது உலகத்தியற்கை யன்றோ; இதை உமக்குள்ளே ஓர்ந்து பாருமென்று கூறிப் பின்னும் ஒருமொழி விளம்பினள்.

56. மகளிர் கண்ணு மனமும் போன்று எங்குங் கடிதாக வோடித் தட்டித் திரியும் சுரும்புகாள்! மிஞிறீட்டங்காள்! மதுவுண்டு மகிழ்கின்ற வண்டுகாள்! மதுவுண்டு தேக்கிடுகின்ற தேன்காள்!

சுரும்பு, மிஞிறு – இவை எல்லா மணத்தினுஞ் செல்லும். வண்டு, தேன் – இவை நல்ல மணத்தே செல்லும். இந் நான்கும் தும்பியது கிளை. சுரும்பு முதலியன கூறும் பாஷையைச் சீவகன் உணர்ந்திருத்தலின், அதனு லவற்றை யழைத்தானென் றுணர்க; விக்கிரமாதித்தன் எறும்பின் பாஷை யறிந்தானென்று கதை கூறுகின்றமையின்.

நீர் வம்மின் என விளித்து வந்த பின்னர், அவற்றை நோக்கி, "சுரமஞ்சரி சுண்ணமும், குணமாலை சுண்ணமும் மிகவும் நல்லன வாயினும் இவற்றுள் நல்லனவற்றை நன்றாகக்கொண்டு உண்ணுமின்" என்று கூறி அவ்வள்ளல் சுண்ண மிரண்டனையும் இரண்டு கையிலுங் கொண்டு ஆகாயத்தே தூவினனாக, அப்பொழுது அவற்றின்மேற் சென்ற சுரும்பும் மிஞிறும் இவை தீயவென்று உண்ணாதுபோதலின் சுரமஞ்சரி சுண்ணம் நிலத்தே வீழ்ந்தன. குணமாலை சுண்ணத்தை அவற்றின் மேற் சென்ற வண்டும் தேனும் விரும்பியுண்டன.

"தத்து நீர்ப்பவ ளத்துறை நித்திலம்
வைத்த போன்முறு வற்றுவர் வாயினீர் !

நங்கைமார்க்கு யான் தேற்றின முறைமையை மனங்கொள்ளும் படி வழுத்துவீர்" என்றான் சீவகன்.

தோழியர் மீண்டு சென்று அச்செய்தியைத் தம் தலைவியர்க்கு அறிவித்தனர். அதனைச் சுரமஞ்சரி கேட்டு அவலமுற்று, "எனது சுண்ணத்தை யிகழ்ந்த சீவகன் வலிந்து வந்து என்னை விரும்பும்படி யான் நோற்பேன்" என்று குறிப்பா லுணர்த்திக் கன்னிமாடஞ் சென்று மற்றை யாடவ ரொருவரையும் மனத்துட் கொள்ளாளாய்ச் சீவகனையே கருதி நோன்பியற்றி யிருந்தனள்.

(வரும்.)

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

காரண விசாரம்.

(வெண்டாமரை ௩, இதழ் ௩, 207-ம் பக்கத் தொடர்ச்சி.)

காரியத்தின் ஞானமே காரண ஞானத்தைப் பெறுதற்கு விருப்பத்தை யுண்டாக்குவது. எது ஜன்னிய பதார்த்தமோ அது காரியம். அக்காரியம் பாவ ரூப (உண்மை வடிவ) காரியமென்றும், அபாவ ரூப (இன்மை வடிவ) காரியமென்றும் இருவகைப்படும். பாவ ரூப காரியமும் திரவிய ரூபம், குண ரூபம், கர்ம ரூபம் என மூவகையாகும். இப் பாவ ரூப காரியங்கள் சமவாயி, அசமவாயி, நிமித்தமென முக்காரணங்களையுடையன. சமவாயி காரணத்தினை உபாதான காரணமெனவும்,

முதற் காரணமெனவும் கூறுவர் சிலர். அசமவாயி காரணத்தினை நிமித்த காரணத்தி லடக்கி உபாதானம், நிமித்தம் என இரண்டே காரணங்களுள வென்பாரும் உளர்.

"காரியத்துக்கு நியதமாய் முன்னிற்பது" என்பது காரணத்தின் பொது விலக்கணமாகும். குடமாகிய காரியத்திற்கு முன்னிற்கும் குயவன் பன்னி, கரம் முதலியனவும் காரணந்தானோ என ஐயுறுவண்ணம் "நியதமாய் முன்னிற்பது" என இலக்கணங் கூறப்பட்டது.

"காரியத்துடன் ஒற்றித்து நிற்கும் காரணம் எதுவோ அதாவது எதனிடத்துச் சமவேதமாய்க் காரியம் நிகழுமோ அது சமவாயி காரணம்" என்பது சமவாயி காரணத்தின் சிறப்பிலக்கணமாகும்.

"சமவாயி காரணத்துடன் ஒற்றித்து நின்று காரியத்தைத் தோற்றுவிப்பது அசமவாயி காரணம்" என்னுமிது அசமவாயி காரணத்தின் சிறப்பிலக்கணமாகும்.

"சமவாயி, அசமவாயி ஆகிய இரு காரணங்களினும் வேருன காரணம் நிமித்த காரணம்" என்பது நிமித்த காரணத்தின் சிறப்பிலக்கணமாம்.

திருஷ்டாந்தம் — வஸ்திரத்திற்கு நூல் சமவாயி காரணம். வஸ்திரமாகிய காரியத்துடன் ஒற்றித்து நின்று காரணமாயிருப்பதால்.

நூல்களின் சையோகம் அதாவது சேர்க்கை அசமவாயி காரணம். வஸ்திரத்தின் சமவாயி காரணமாகிய நூலினிடத்து அச் சையோகம் ஒற்றித்து நின்று வஸ்திரத்தைத் தோற்றுவிப்பதால்.

துரி, வேமா, ஆடைநெய்வோன் முதலியன நிமித்தகாரணங்கள். முற்கூறிய சமவாயி, அசமவாயி காரணங்கட்கு வேருயிருந்து ஆடையையுண்டாக்குவதாவதால்.

இவைகளேயன்றி எல்லாக் காரியங்கட்கும் பொதுவாயுள்ள காரணம் ஒன்பது. அவை இவை: — ஈசுவரன் 1, ஈசுவரனது இச்சை 2, ஈசுவரனது ஞானம் 3, ஈசுவரனது முயற்சி 4, முன்னின்மை 5, தடையின்மை 6, திக்கு 7, காலம் 8, அதிருஷ்டம் 9. இவ்வொன்பது காரணங்களின்றி எக்காரியமும் உண்டாகா. ஆகலின் இவ்வொன்பதும் சாதாரண (பொதுக்) காரணங்களெனப்படுகின்றன. அபாவ ரூப காரியங்கள் நிமித்த காரணமாத்திரத்தை யுடையன.

இப்போதிங்குக் காரணவிசாரம் சமுத்திர கலசோதக நியாயமாக அதன் தன்மைமாத்திரம் சிறிது தோன்றும்படி மிகச் சுருக்கமாகச் செய்யப்பட்டது.

விரிவான விசாரம் நியாய சாஸ்திரங்களில் பிரசித்தம்.

காரண சொரூப ஞானமிலார்க்குக் காரண சொரூப விசாரத்தில் பிரவிருத்தி யுண்டாம்பொருட் டெழுதப்பட்ட திதுவாகலின் விரித்துக் கூறாமைக்குக் குறைகூறார் அறிஞர்.

வித்தைவிரும்பி.

ஈசுவர நிச்சயம்.

(வெண்டாமரை ௨, இதழ் ௧, 206-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஈசுவர நிச்சய விஷயமாய்.

நியாய சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள ஒன்பதுவித அநுமானங்களுள் முதலாவது அனுமானம் வருமாறு :—

அங்குரம் முதலிய காரியங்கள் ஓர் கர்த்தாவால் உண்டாக யோக்கியமாம்; காரிய வடிவமாதலின்; கடம்போல. அங்குரம் முதலிய காரியங்களின் கர்த்தாத்தன்மை எந்த ஜீவனிடத்தும் சம்பவியாது. ஈசுவரனிடத்திலேயே அக் கர்த்தாத்தன்மை சம்பவிக்கின்றது.

இதிலோர் சங்கை :—

அங்குராதி காரியங்கள் கர்த்தா இன்றியே பிருதிவி ஜலங்களின் சையோக முதலியவைகளாலேயே உண்டாகும்; ஆகலின் ஈசுவர வடிவ கர்த்தாவை யொப்புவதில் பயன் யாதுமின்று.

சமாதானம் :—

ஈசுவர வடிவ கர்த்தா இன்றியே கேவலம் பிருதிவி ஜலங்களின் சையோகத்தால் அங்குரம் முதலியவைகளின் உற்பத்தியை அங்கீகரிக்கின் கட முதலிய காரியங்களும் குலாலன் முதலிய கர்த்தா இன்றியே கேவலம் மண் ஜலம் முதலியவைகளின் சையோகத்தால் உண்டாதல் வேண்டும். அங்ஙனம் உண்டாதலில்லை. ஆதலின் கடாதி காரியங்களைப் போன்று அங்குராதி காரியங்களும் ஓர் கர்த்தாவின்றி யுண்டாகா. இக் கர்த்தாத்தன்மை எந்த ஜீவாத்மாவினிடத்தும் சம்பவியாது. பரிசேஷமாக ஈசுவரனையே இஜ்ஜகத்தின் கர்த்தாவாக ஒப்பவேண்டும்.

(இன்னும் வரும்.)

ஓர் ஆஸ்திகன்.

242

சோதிட விளம்பரம்.

மந்திரேசுவரியம் என்னும் பலதீபிகை :— இந்நூல் ஸ்ரீமந்திர முனிவரால் முன்னூல் பலவற்றுனின்றும் தொகுத்தெழுதப் பெற்ற 900 சுலோக வியாக்கியானங்கள் கொண்டதாய், இதர நூற் பிரமாண வியாக்கியானங்கள் 600 சேர்க்கப்பெற்றதாய், உயர்ந்த கடிதத்தில் சுமார் 300 பக்கங்கட்கு மேற்கொண்டதாய், செந்தமிழ் நடைபொருந்திய அதி சுலப வசனங்களால் ஆக்கப்பெற்றதாய், விலை ரூபா ஒன்றேகாலுடையதாய், சோதிடம்பயின்றோரும் பயிலாதோரும் எளிதிலறியுமாற்றலுடையதாய், நாரதீய கார்க்கேய கேரள முதலிய நூற் கருத்துக்களையும் பராசரர் பாஸ்கரர் முதலாயினோர் கருத்துக்களையும் தன்னிடத்துடையதாய், கால புருஷ அங்கம் முதல் லத்தா பலன் வரை விரித்துரைக்கத் தக்கதாய் வெளிவந்திருக்கின்றது. இது ஒவ்வோர் சோதிடரகத்தும் அத்தியாவசிகமாக இருத்தற் குரியது. சோதிடச் சார்பாய ஒவ்வோர் விடயத்தையும் நுண்ணிய கருத்துடன் தெரிவிக்க வல்லதும் அத்துணை விஷயங்களையெல்லாம் அடக்கிவைத்துள்ளதுமான இந்நூலே சோதிடக் களஞ்சியமாம். குறைந்த விலைக்கு நிறைந்த பொருள் கொள்வார்க்கு இதுவே ஏற்ற சமயம்.

சோதிட கணிதம் :— இது ஒன்றுதான் சுதேச விராசிமானங்களைக் கணிக்கத் தக்க நல்ல வழியினையும், நவக்கிரக ஸ்புட நெறியினையும், இன்னும் பல்வகைத் துறையினையும் காட்ட வல்லது. இஃதொன்றைக்கொண்டே சோதிட சாஸ்திர உள்ளுறையனைத்தையும் அறியவேண்டுமாகலின் இனிய வசனங்கள்செறிந்து சுலப வழிகாட்டியாயுள்ள இதனை யாதரித்து அகமகிழவே ஆறணு விலைக்குக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

புட்ப பந்தம் :— மழை வளங் கூற வல்லது. விலை அணு நான்குள்ளது. விருஷ்டி வேறுபாட்டினை உரைக்க வல்லது. ஒவ்வோர் கிரகச் சேர்க்கையாலும் இத்துணைத் தூரம் மழை பொழியும் பொழியாது என இன்மை உண்மை கூறவல்லது. 500 சுலோக அருத்தங்கள் கொண்டது. மாரி குன்றுமை கூறிக் கிருஷிகரை இன்னின்ன வகை வேளாண்மை புரிகவெனத் தூண்டக் கூடியதாகலின் இஃதும் இன்றியமையாத தொன்றேயாம்.

சு. ஏ. குமாரஸ்வாமியாசாரி,

ஏகாம்பர ஆசாரி வீதி, பறங்கிப்பேட்டை.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

. . பி. சுப்பருய், ஆயுர்வேத
ஔ ஷ த சா லை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

32. இரத்த சுத்தி :— தேகத்தில் இரத்தம் கெட்டுப்போவதால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண், புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம் முதலிய சருமவியாதிகள்; பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய்கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல் நிறம் மாறுதல், தோலில் சொறணையற்றுப் போகுதல், புத்தி மந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். இரத்தத்திலுள்ள நஞ்சைப் போக்கி சுத்தப்படுத்தி, தேக வலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி உண்டாக்கும். 20 நாளைக்குப் போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபா 2. வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

33. சித்த மகரத்துவஜம் :— இது மகரத்துவஜத்தைவிட சிறந்த ஔஷதம். இதனால் தீராத வியாதி ஒன்றுமில்லை. சர்வ சுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினி மாந்தம், காலரு, சீத பேதி, ரத்தபேதி, சகல வாயுவு இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம் மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100 வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. ஏழுவேளைக்குள்ள மருந்து ரூபா 3. வி. பி. செலவு பிரத்தியேகம்.

244

34. வாயு சம்ஹாரி: — கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால் முடக்கு, தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலைநோய், பக்க சூலை, பார்சுவாயுவு, திமிர்வாயுவு, அஜீரணம், குன்மம், அண்டவாயுவு, சூலைவாதம், மலஜலக்கட்டு முதலிய அநேகவித வாயுவு ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

35. காலரா என்னும் வாந்திபேதிக்கு மருந்து: — இக் கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா ஒன்று, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. மலபந்த நிவாரணி: — மல ஜலக்கட்டு, அக்கினி மாந்தம், வாயுவு, குடல் புறட்டல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செறியாமை, புளித்தயேப்பம் முதலியன தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. சந்திராமிருத ரசம்: — அசாத்தியமான காசம், இருமல், க்ஷயமுதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும். நல்ல பசியும், தேக பலமும் உண்டாக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து: — எத்தனைநாள்பட்டதானாலும் இம் மருந்தினால் வயிறு கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிருணி, வயிறு கடுப்பு முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.